**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1675 - 2010 ඔක්තෝබර් මස 08 වැනි සිකුරාදා - 2010.10.08

*1675 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1432 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் மத்திய மாகாண சபை

*மத்திய மாகாண சபையின் உத்தேச கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் மேம்படுத்தல் பிரகடன சட்டமூலம்*

*மத்திய மாகாணத்தில் மாகாண சபையில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி பிரகடனத்தின் சட்டமூலம் பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கீழே பிரசுரிக்கின்றேன்.*

*இவ்வறிவித்தல் வர்த்தமான பத்திரிகையில் வெளியாகி 10 தினங்கள் கடந்து சென்ற பின்பு இச் சட்டமூலம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மத்திய மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது என்பதை அறியத்தருகிறேன். இப்பிரகடனத்தில் உள்ள விடயங்கள் தொடர்பாக ஏதாவது கருத்தை சமர்ப்பிக்க விரும்பினால் இவ் அறிவித்தல் வெளியாகி 10 தினங்களுக்குள் அவ் விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை எழுத்துமூலமாக எனக்கு அறியதருதல் வேண்டும்.*

*அனுஷியா சிவராஜா,*
*கைத்தொழில், விளையாட்டுக்கள், மகளிர் விவகார, கிராமிய அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, இந்து கலாசார, இளைஞர் விவகார மற்றும் கல்வி (தமிழ்) அமைச்சர்.*

*அ. பெ. இல. : 41,*
*கெட்டம்பை,*
*பேராதனை.*

## மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் மேம்படுத்தலுக்கான பிரகடன சட்டமூலம் - 2010

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் ஒன்பதாம் அட்டவணையில் முதலாவது பட்டியலின் 21 யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தலுக்கான விடயத்தை நடைமுறைப்படுத்தி மத்திய மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் மேம்படுத்தல் சேவைகளை உற்பத்தி திறன்மிக்கதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் நடைமுறைப்படுத்தி செல்வதற்காக அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை செய்து கொடுப்பதற்கான பிரகடனம்.*

*இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் மத்திய மாகாண சபையின் மூலம் இத்தால் கட்டளையிடுகின்றது.*

*சுருக்கப் பெயரும் அது நடைமுறையாகும் திகதியும்.*

*01. இந்தச் சட்ட மூலம் 2010 ஆம் ஆண்டின் .......... இலக்க மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தலுக்கான சட்டமூலம் என்றழைக்கப்படுவதுடன் அது ஆளுநரால் அனுமதிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறையாகும்.*

### I **ஆம் பிரிவு**

### கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் திணைக்களம்

*மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தை அமைத்தல்.*

*2. மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தலுக்காக வேண்டி மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் திணைக்களம் என்றழைக்கப்படுகின்ற (இங்கு இதன் பின்னர் திணைக்களமாக அழைக்கப்படுகின்ற) திணைக்களம் ஒன்று அமைக்கப்படும்.*

*மத்திய மாகாண கைத்தொழில் பணிப்பாளர்.*

*3. (i) இங்கு இதன் பின்னர் பணிப்பாளர் என்ற அழைக்கப்படுகின்ற மத்திய மாகாண கைத்தொழில் பணிப்பாளர் 2 ஆம் உறுப்புரையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் முதல்வராவார். அவர்/அவள் இலங்கை பரிபாலன சேவையின் 1 ஆம் வகுப்பு அலுவலராக இருக்க வேண்டியதுடன், கௌரவ ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்படுவார்.*

(ii) திணைக்களத்தின் அலுவல்களுக்காக தேவையான அலுவலக ஊழியர் நியமித்தல் இடமாற்றம் செய்தல், பதவி உயர்வுகள் உட்பட அவர்கள் சம்பந்தமாகாக ஒழுக்காற்று நடவடிக்கையை பரிபாலனம் செய்தல் சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் நடவடிக்கைகள் அதன் பின்னர் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களும், சட்டதிட்டங்களும் இதற்கு உட்பட்டதாகும்.

4. (i) திணைக்களத்தின் வேலைகளைச் செய்து கொண்டு போவதற்கு கைத்தொழில் பிரதி பணிப்பாளர், கைத்தொழில் உதவி பணிப்பாளர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களை நியமிக்கலாம்.

(ii) இந்தச் சட்டமூலத்தின் கீழ் கைத்தொழில் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், செயற்பாடுகளையும், வழங்கப்பட்டுள்ள வேறு எந்தவிதமான செயற்பாடுகளையும் அதிகாரங்களையும் பிரதிப் பணிப்பாளர் அல்லது வேறு எந்தவொரு உத்தியோகத்தருக்கும் கைமாற்ற முடியும்.

*கைத்தொழில் பணிப்பாளருக்கு தனது அதிகாரத்தை கைமாற்ற முடியும்.*

5. (i) இந்த பிரகடனத்தில் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கட்டளை பிறப்பிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உண்டு.

*அமைச்சருக்கு உள்ள அதிகாரங்கள்.*

(ii) கைத்தொழில் பணிப்பாளரினால் இடப்படுகின்ற ஏதும் சாட்டுதல்கள் அல்லது தீர்மானங்கள் பற்றி மேன்முறையீடு செய்யப்படுமிடத்து இந்த பிரகடனத்தின் கீழ் செயலாளரினால் தனது சுய விருப்பிற்கேற்ப அந்த தீர்மானங்களை மாற்றுவது சட்டபூர்வமானதாகும். அது போன்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயலாளரின் தீர்மானங்கள் இறுதித் தீர்மானமாகும்.

*செயலாளருக்கு உள்ள அதிகாரங்கள்.*

6. மத்திய மாகாணத்தின் உயர் கைத்தொழில் கலாசாரத்துக்காக வேண்டி கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் சேவை வழங்குவதற்கான விஷேடமான தாபனமாக மாற்றி தொழில் முயற்சி அபிவிருத்தி, தொழில் நுட்பவியல் அபிவிருத்தி, படைப்பாற்றல் திறன் விருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளின் நோக்காகக் கருதி புதியதான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாகாணத்தின் நிரந்தரமான அபிவிருத்திக்கு உயரிய பங்களிப்பைச் செய்வதே இத்திணைக்களத்தின் நோக்கும் அதன் பணியுமாகும்.

*கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தின் நோக்கும் பணியும்.*

7. (i) மத்திய மாகாணத்தினால் தற்போதிருக்கின்ற கைத்தொழில்களை மேலும் அபிவிருத்தி செய்து, புதிய கைத்தொழில்களை ஆரம்பித்து அவற்றின் பொருளாதார நன்மைகளை முடியுமான அளவு உயரிய மட்டத்துக்கு கொண்டுவருவதற்காக மத்திய மாகாணத்தை கைத்தொழிலுக்கான கவர்ச்சிமிகு பிரதேசமாக மாற்றியமைத்தல்.

*கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தின் நோக்கம்.*

(ii) கைத்தொழில் துறையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்துக்கு பெற்றுக்கொடுக்கும் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யவும், கைத்தொழில் துறையின் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்வதுடன், பிரதேசத்தின் வேலை வாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் வறுமையை இல்லாமல் செய்வதற்கான பங்களிப்பை அதிகரித்தல்.

(iii) மத்திய மாகாணத்திற்கு உரித்தான பாரம்பரிய கைத்தொழில்களை பாதுகாப்பதற்கு முதலிடம் வழங்கி நுண்ணிய, சிறிய, நடுத்தர அளவினதான கைத்தொழில்களை புதிதாக ஆரம்பிப்பதற்கும், தற்போதுள்ள கைத்தொழில்களை மேலும் விரிவுபடுத்துவதற்கும் ஊக்கமளித்தல்.

8. மத்திய மாகாணத்துக்குள் கீழ்க்காணும் சேவைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்வது திணைக்களத்தின் பணியாகும் :-

*மாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக் களத்தின் பணிகள்.*

(1) கைத்தொழில் துறைக்கான குறிப்பிட்ட திறமையுடனான மனிதவள அபிவிருத்தி.
(2) நுண்ணிய, சிறிய, மத்திய அளவினதான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.
(3) பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி.
(4) மிகவும் மோசமடைந்துள்ள கைத்தொழில்களை கட்டியெழுப்புதல்.
(5) கைத்தொழில் அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல்.
(6) கைத்தொழல் துறைக்கான குறிப்பிட்ட தொழிநுட்ப அபிவிருத்தி.
(7) கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய தாபன அபிவிருத்தி.
(8) கைத்தொழில் துறைக்கு சாதகமான வகையில் சட்டதிட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்தல்.
(9) விவசாய கைத்தொழில் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை ஏற்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

(10) கைத்தொழில் துறையின் உற்பத்தி திறனை அதிகரித்தல்.
(11) தொழில்நுட்ப மூலதன வசதிகளை வழங்குவதற்கு மத்தியஸ்தம் வகித்தல்.
(12) கைத்தொழில் துறைக்கான பயிற்சி ஆராய்ச்சி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
(13) கைத்தொழில் துறை சார்ந்த வர்த்தக வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்தல்.
(14) கைத்தொழில் துறையில் அரச, தனியார் உறவுகளை விருத்தி செய்வதும், வர்த்தக சபையினை வலுவடையச் செய்தலும்.
(15) கைத்தொழில் துறையில் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

*மாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தின் அதிகாரங்கள்.*

9. இந்த பிரகடனத்தின் கீழ் திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும், அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காரியங்களை செய்வதற்கும் தேவையான அதிகாரங்களும் எழுத்துமூல சட்டத்தின் எல்லைகளுக்குள் திணைக்களம் இருக்க வேண்டும்.

*ஊழியர்கள்.*

10. திணைக்களத்தின் இடைக்கிடை ஏற்படும் தேவைகளுக்கு ஏற்ப ஊழியர்களை கேட்டுப் பெற்றுக்கொள்ள கைத்தொழில் பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.

## II ஆம் பிரிவு

### மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தின் ஆலோசனை சபை

*மாகாண கைத்தொழில் ஆலோசனை சபை.*

11. (i) மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் நடவடிக்கை பற்றி அமைச்சருக்கு பொதுவாக ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட மாகாண கைத்தொழில் ஆலோசனை சபை ஒன்றினை அமைச்சரினால் தெரிவு செய்து நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

(ii) இந்த ஆலோசனை சபையானது கீழ்க் காணும் நபர்களை கொண்டதாக இருத்தல் வேண்டும் :-

(1) மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர்.
(2) மாகாண கைத்தொழில் பணிப்பாளர்.
(3) அமைச்சரினால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் இருவர்.
(4) தேசிய கலைச் சபையின் மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர்.
(5) ஏற்றுமதி வர்த்தக சபையின் தலைவர்.
(6) மத்திய மாகாண வர்த்தக கைத்தொழில் சபையின் பிரதிநிதிகள்.
(7) அரச தொழில்நுட்ப நிறுவனமொன்றின் தொழில்நுட்ப ஆய்வு ஆலோசகர்.
(8) மாகாண கலைச் சபையின் தலைவர்.
(9) பேராதனை பல்கலைக்கழகத்தின் நுண் கலைத்துறையின் துறைசார் தலைவர்.
(10) வங்கிகளினது பிரதிநிதித்துவத்துக்கான ஒருவர்.
(11) தேசிய வடிவமைப்பு நிலையத்தின் மத்திய மாகாண பிரதிப் பணிப்பாளர்.

(iii) கைத்தொழில் அமைச்சின் செயலாளர், பதவி வழியாக இந்த ஆலோசனை சபையின் தலைவராவர்.

(iv) கைத்தொழில் பணிப்பாளர், பதவி வழியாக இந்த ஆலோசனை சபையின் செயலாளராவர்.

(v) அங்கத்தவர்களின் பதவிக்காலம் இரண்டு வருடங்களாகும்.

(vi) பதவியிலிருந்து கேட்டு விலகிக் கொண்டமையினால், அல்லது மரணமடைந்ததினால் அல்லது பதவிக்காலம் முடிவடைந்ததினால் அல்லது அமைச்சரினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையினால் அங்கத்தவரின் பதவிக்காலம் முடிவடையும்.

(vii) பதவிக்காலம் முடிவடைந்த காரணத்தினால் வெற்றிடமாகும் இடத்துக்கு அதே அங்கத்தவரை நியமிக்கலாம்.

(viii) சபை கூட்டத்திற்கான கோரம் (கூட்ட நடப்பெண்) ஏழு பேர்களாகும்.

12. குறிப்பிட்ட ஆலோசனை சபை குறிப்பிட்ட விடயம் பற்றி அமைச்சர் அவர்களுக்கு உரிய கண்காணிப்பு, பரிந்துரை அல்லது ஆலோசனை வழங்குதலும், கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தின் சேவைகளை மேம்படுத்துவதும் ஆலோசனை சபையின் பங்களிப்பாகும். ஆலோசனை சபையின் பணிகள்.

13. ஆலோசனை சபை ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது ஒன்று கூடல் வேண்டும்.

14. (i) மாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக்களம், இலஞ்ச சட்டத்தின் பொருள்கோடல் அட்டவணையின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகையால் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதன் பிரகாரம் செல்லுபடியாகும். மாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக்களம் அட்ட வணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகும்.

(ii) திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் சட்டத்தின் வரையறைக்குள் இரகசியத்தை பேணல் வேண்டும். இரகசியம் பேணல்.

15. மாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் தண்டனைக்கோவையின் பொருள் கோடல், அதன் விடயங்களுக்காக அரச ஊழியர்களாக கருதப்படுவார்கள். உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் அரச சேவையாளர்களே.

## III ஆம் பிரிவு

## குற்றங்களும் தண்டனைகளும்

16. இந்த பிரகடனத்தின் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதாவது கட்டளை அல்லது ஏற்பாட்டை மீறுதல் அல்லது அதன்படி செயற்படத் தவறுதல் அல்லது இந்த பிரகடனத்தின் கீழ் ஏதாவது ஒரு நபருக்கு சாட்டப்பட்டிருக்கும் கடமையை செய்வதற்கு வேண்டுமென்றே இடையூறு செய்யும் எந்த ஒரு நபரும் இந்த பிரகடனத்தின்கீழ் குற்றவாளியாவார். குற்றங்கள்.

17. இந்த பிரகடனத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் செய்யப்படுகின்ற குற்றங்கள் சம்பந்தமாக நடைமுறையில் உள்ள சாதாரண பொதுச்சட்டம் அமுலாவதுடன் அதன் பிரகாரம் சாதாரண சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் குற்றம் சம்பந்தமாக நியமிக்கப்படுகின்ற தண்டனை வழங்கப்படும். தண்டனைகள்.

## IV ஆம் பிரிவு

## பொதுவான ஏற்பாடுகள்

18. (i) இந்த பிரகடனம் செயற்படும் திகதிக்கு முன்னதாக உள்ள தினத்தில் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக மாகாணத்தில் பயன்படுத்தப்பட்ட எல்லாவிதமான தாபனங்களுக்கும் சொந்தமாக இருக்கும் சொத்துக்களும், ஆதனங்களும் இந்த பிரகடனத்தின்கீழ் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள், ஆதனங்கள் எனக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். திணைக்களத்தின் சொத்துக்கள்.

(ii) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (iii) ஆம் விதிமுறையின்கீழ் அல்லாது பயிற்சி விற்பனை சேவை நிலையங்களின் கட்டிடங்கள் நிலம் என்பவற்றை வேறு விடயங்களுக்காக பயன்படுத்தக்கூடாது. திணைக்களத்தை வேறு பொது விடயங்களுக்கு உபயோகித்தல்.

(iii) பொது முக்கியத்துவம் வாய்ந்த வேறு விடயங்களுக்கு இந்த தாபனத்தை பயன்படுத்த தேவைப்படுமிடத்து செயலாளரின் அல்லது கைத்தொழில் பணிப்பாளரின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

19. (i) பிரகடனத்தின் கீழ் அமைக்கப்பட்ட தாபனங்களின் பராமரிப்புக்கு தேவைப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டை பெற்றுக்கொடுப்பது, செலவு செய்வது சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் விதிமுறைகள் இதற்கு அமைவானது. திணைக்களத்தின் செயற்பாட்டுக்கான நிதி உதவிகள்.

(ii) எழுத்துமூல விதிமுறைகளுக்கு உட்பட்டு திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக உள்நாட்டு, வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து நிதி, பொருள் அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொள்ள இடையூறுகள் இருக்கக்கூடாது.

*வருடாந்த கட்டுப்பாட்டு அறிக்கை.*

20. வருடத்திற்குள் மாகாணத்தினுள் கைத்தொழில் அபிவிருத்தி தொழில் மேம்படுத்தல் நடவடிக்கைகளைச் செய்து கொண்டு செல்லும் முறை, ஏற்பட்ட பிரச்சினைகள், அவைகளை தீர்ப்பதற்கு எடுத்த படிமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த கட்டுப்பாட்டு அறிக்கையை ஒவ்வொரு வருடமும் கடந்த ஆறு மாதங்கள் செல்வதற்கு முன்னர் பணிப்பாளரினால் அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

*பணிப்புரைகள் வழங்குவதற்கு அமைச்சருக்கு உள்ள அதிகாரம்.*

21. திணைக்களத்தின் அதிகாரங்களை செயற்படுத்துவது பற்றி அமைச்சரினால் திணைக்களத்துக்கு விஷேட அல்லது பொதுவான அல்லது ஈடுபாட்டு பொறுப்பை எழுத்துமூலம் வழங்கப்பட முடியுமானதுடன், திணைக்களத்தினால் அந்த பணிப்புரைகள் நடமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

*கட்டளை இடுவதற்கு அமைச்சருக்கு உள்ள அதிகாரம்.*

22. (i) இந்த பிரகடனத்தில் அடங்கியுள்ள கொள்கைகள், ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரினால் கட்டளையிட முடியும்.

(ii) அமைச்சரினால் தயாரிக்கப்படுகின்ற எல்லாவித கட்டளைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டியதுடன், அப்படி பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அப்படி குறிப்பிட்ட திகதிக்கு மறுதினத்திலிருந்து அது நடைமுறையாகும்.

(iii) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் அங்கீகாரத்துக்காக அந்த கட்டளைகளை கூடிய விரைவில் மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதுடன், அப்படி அங்கீகரிக்கப்படாத ஏதும் கட்டளைகள் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பாதகம் ஏற்படாத வகையில் அதை அங்கீகரிக்கப்படாத தினத்திலிருந்து வேறாகப்பிரிக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டும்.

(iv) ஏதும் கட்டளைகள் அப்படி வேறாகப் பிரிக்கப்பட்டதாக கருதப்படும் தினத்தினை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

*புதிய தாபனங்களை அமைத்தல்.*

23. மத்திய மாகாணத்துக்குள் மக்களின் தேவை, தகைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரின் உடன்பாட்டோடு புதிய பயிற்றப்பட்ட உற்பத்தி சேவைகள், விற்பனை நிலையங்கள், கைத்தொழில் அபிவிருத்திக்கு ஆக்கவளமுடைய நிறுவனங்கள் புதிதாக அமைக்கப்படல் வேண்டும்.

*தாபனத்தை பரீட்சிப்பதற்கான அதிகாரம்.*

24. அமைச்சரினால் அல்லது பணிப்பாளரினால் அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அமைச்சின் அல்லது திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் மாகாணத்துக்குள் அமைந்துள்ள திணைக்களத்துக்குச் சொந்தமான நிலப்பரப்பிற்குள் உட்செல்லவும், பரீட்சிப்பதற்கும் சட்டபூர்வ அதிகாரம் உண்டு.

*சொற்களின் பொருள்.*

25. சொற்கள் சம்பந்தமாக மொழிபெயர்ப்பு தேவைப்படின் மாத்திரம் இந்த பிரகடனத்தின்,

'கைத்தொழில்' என்றால் நுண்ணிய, சிறிய, நடுத்தர என்ற எல்லாவிதமான கைத்தொழில்களும் அடங்கும்.

'அமைச்சர்' என்றால் மத்திய மாகாண அமைச்சரவையின் தைக்தொழில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரை குறிக்கும்.

'மாகாணம்' என்றால் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் மத்திய மாகாணத்தை குறிக்கும்.

'மாகாண சபை' என்றால் மத்திய மாகாண சபையை குறிக்கும்.

'செயலாளர்' என்றால் மத்திய மாகாண சபையின் கைத்தொழில் விடயத்துக்கு பொறுப்பான செயலாளரை குறிக்கும்.

'கைத்தொழில் பணிப்பாளர்' என்றால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்ட மூலத்தின் நடவடிக்கைகளின் கீழ் மத்திய மாகாணத்துக்காக அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில் அபிவிருத்தி, தொழில் மேம்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளரை குறிக்கும்.

*முரண்பாடுகள் ஏற்படின் அப்போது சிங்கள மொழிக் கருத்தை பொருத்துமானதாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

26. இந்த பிரகடனத்தின் சிங்கள, தமிழ் சொற்களுக்கிடையில் ஏதும் முரண்பாடுகள் ஏற்படின் அப்போது சிங்கள மொழி கருத்தை பொருத்தமானதாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## ஹம்பாந்தோட்டை நகர சபை

களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு ஹம்பாந்தோட்டை நகர சபையினால் நிறைவேற்றப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை, குறித்த பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு தென் மாகாணத்தின் மாகாண உள்ளூராட்சி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதென்று குறித்த உட்பிரிவுக்கமைய இத்தால் வெளியிடப்படுகின்றது.

### பிரேரணை

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு ஹம்பாந்தோட்டை நகர சபை, சபையின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற, குறித்த கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் களியாட்ட நடவடிக்கைக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற கொடுப்பனவிலிருந்து (களியாட்ட வரி தவிர்ந்த) நூற்றுக்கு 7% சமமான வரியை விதித்து அறவிட வேண்டுமென்றும், இந்தப் பிரேரணை நிறைவேற்றமானது வர்த்தமானியின் வெளியிடப்பட்ட மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவேண்டுமென்றும் பிரேரிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்தப் பிரேரணை நிறைவேற்றமானது வரும் முதல் இரு வருடங்களுக்குள் திரைப்படமொன்றை கண்டு களிப்பதற்காக செலுத்தப்படுகின்ற கட்டணத்தின் மீது அறவிடப்படவேண்டிய வரித்தொகை செலுத்தப்படுகின்ற கட்டணத்தால் நூற்றுக்கு ஏழு சத வீதமாக இருத்தல் வேண்டும்.

செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு,
தென் மாகாணம்.

நகர சபை அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை,
2010, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி.

10-326

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.